www.Padasalai.Net

மேல்நிலை இரண்டாமாண்டு இயற்பியல் ஒரு மதிப்பெண் வினாக்கள்- திருப்புதல் தேர்வு.

BEst wishes

தயாரிப்பு

பா.இளங்கோவன். எம்.எஸ்ஸி., எம்.எட்., எம்.ஃபில்.,

(தமிழக அரசு டாக்டர் இராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருது - 2011 பெற்றவர்)

முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் (இயற்பியல்),

பச்சையப்பன் மேனிலைப் பள்ளி,

காஞ்சிபுரம் - 631501.

தொலைபேசி - 9444438464

மின்னஞ்சல் -belangovanphss@gmail.com

www.TrbTnpsc.com

+2 இயற்பியல் ஒரு மதிப்பெண் தேர்வு

காலம் - 3 மணி **மதிப்பெண் - 200**

1. மின்புலப் பாயத்தின் அலகு .....

a) $N\ m^2\ C^{-1}$ b) $N\ m^{-2}\ C^{-1}$ c) $N\ m^2\ C$ d) $N\ m^{-2}\ C$

2. கீழே உள்ள ..... ஒரு ஸ்கேலர் அளவாகும்.

a) இருமுனைத் திருப்புத் திறன் b) மின்புல விசை

c) மின்புலம் d) மின்னழுத்தம்

3. இணைத்தட்டு மின்தேக்கியில் தகடுகளுக்கிடையே மின்னழுத்தம் 100 V. மின்புலம் $10^4\ Vm^{-1}$ எனில், தட்டுகளிடையே உள்ள தொலைவு .....

a) 1 mm b) 1 m c) 10 cm d) 1 cm

4. ஹீலியம் உட்கருவில் இரு புரோட்டான்களிடையே உள்ள தொலைவு 9×10^{-15} m. அவைகளுக்கு இடையே உள்ள மின்னழுத்த ஆற்றல் .....

a) 9×10^{-14} J b) 1.44×10^{-15} J

c) 2.56×10^{-14} J d) 1.6×10^{-5} J

5. ஒரு எலக்ட்ரானும், ஒரு புரோட்டானும் பிரிக்கப்பட்டுள்ள தொலைவு $10\ A^0$ எனில், அவைகளின் இருமுனைத் திருப்புத்திறன் .....

a) 9×10^{-29} C m b) 16×10^{-29} C m

c) 8×10^{-29} C m d) 2×10^{-29} C m

6. எதிரெதிர் மின்னூட்டம் பெற்ற இரு இணையான தட்டுகளிடையே ஒரு புள்ளியில் மின்புலத்திற்கான சமன்பாடு .....

a) $E = \sigma / \varepsilon_0$ b) $E = \sigma / 2\varepsilon_0$ c) $E = \varepsilon_0 / \sigma$ d) $E = 0$

7. மின்தேக்கியில் சேமிக்கப்படும் ஆற்றல் .....

a) $\frac{1}{2} \times CV$ b) $q^2 / 2C$

c) (a) மற்றும் (b) இரண்டும் d) இதில் எதுவுமில்லை

8. 10 C மின்னூட்டம் ஒன்று, $5\ NC^{-1}$ மின்புலத்தில் உணரும் விசையின் மதிப்பு .....

a) 10 N b) 50 N c) 5 N d) 2 N

9. ஒப்புமை விடுதிறன் ε_r கொண்ட ஊடகத்தில் இரு மின்னூட்டங்கள் வைக்கப்பட்டால், அவைகள் இடையே ஏற்படும் விசை .....

a) $F\ \varepsilon_r$ b) ε_r / F c) F / ε_r d) 0

Best wishes

10. இணைத்தட்டு மின்தேக்கியின் தட்டுகளிடையே மின்காப்புப் பொருளை வைக்கும் போது, மின்தேக்குத்திறன் 10 μF லிருந்து 50 μF க்கு அதிகரிக்கின்றது எனில், மின்காப்புப் பொருளின் மின்காப்பு மாறிலி ε_r .....

a) 50 b) 40 c) 10 d) 5

11. 1 μC மின்னூட்டத்திலிருந்து உருவாகும் மின்விசைக் கோடுகளின் எண்ணிக்கை .....

a) 1.129×10^{-5} b) 1.129×10^{-11}

c) 1.129×10^{11} d) 1.129×10^{5}

12. ஒரு காஸ்ஸியன் பரப்பில் ஒரு புரோட்டானும், ஒரு எலக்ட்ரானும் உள்ளன. அப்பரப்பின் வழியே செல்லும் மின்விசைக் கோடுகளின் எண்ணிக்கை .....

a) $q / 2\varepsilon_0$ b) q / ε_0 c) $2q / \varepsilon_0$ d) 0

13. $(1 / 4\pi\varepsilon_0)$ - ன் மதிப்பு .....

a) 9×10^{9} N m^2 C^{-2} b) 1.129×10^{11} N m^2 C^{-2}

c) 9×10^{-9} N m^2 C^{-2} d) 1.6×10^{-19} N m^2 C^{-2}

14. சீரான மின்புலத்திற்கு இணையாக ஒரு மின் இருமுனை வைக்கப்பட்டால் , அது உணர்வது ..

a) விசை b) திருப்புவிசை

c) இருமுனைத் திருப்புத் திறன் d) எதுவுமில்லை

15. மின்தேக்குத் திறனின் அலகு .....

a) volt b) ampere c) farad d) coulomb

16. இரு புள்ளிகளுக்கு இடையே +20 C மின்னூட்டத்தை 2 cm தொலைவு நகர்த்த செய்யப்படும் வேலை 200 J எனில், அப்புள்ளிகளிடையே உள்ள மின்னழுத்த வேறுபாடு .....

a) 0.1 V b) 10 V c) 400 V d) 4000 V

17. ஒரு மின்காப்புப் பொருளை E_0 புறமின்புலத்தில் வைக்கும்போது, மின்காப்புப் பொருளில் மின்புலம் .....

a) E_0 க்கு எதிரான திசையில் செயல்படும்

b) E_0 க்கு இணையான திசையில் செயல்படும்

c) E_0 க்கு செங்குத்தான திசையில் செயல்படும்

d) சுழியாகும்

Best wishes

18. q_1 மற்றும் q_2 மின்னூட்டங்களின் மின்னழுத்த ஆற்றல் .....

a) $q_1q_2 / 4\pi\varepsilon_0 r^2$ b) $q_1q_2 / 4\pi\varepsilon_0 r^3$ c) $q_1q_2 / 4\pi\varepsilon_0 r^4$ d) $q_1q_2 / 4\pi\varepsilon_0 r$

19. 9 pF மின்தேக்குத்திறன் கொண்ட மூன்று மின்தேக்கிகள் தொடர் இணைப்பில் உள்ள போது, தொகுபயன் மின்தேக்குத் திறன் .....

a) 9 pF b) 27 pF c) 3 pF d) 6 pF

20. சம மின்னழுத்தப் பரப்பில் 500 C மின்னூட்டத்தை ஒரு புள்ளியிலிருந்து, மற்றொரு புள்ளிக்கு நகர்த்த செய்யப்படும் வேலை .....

a) சுழி b) வரம்புள்ள நேர்க்குறி மதிப்பு

c) 500 J d) வரம்புள்ள எதிர்க்குறி மதிப்பு

21. கீழ்க்கண்ட ..... ஒரு வெக்டர் அளவாகும்.

a) மின்னழுத்தம் b) மின்னூட்டம் c) மின்னோட்ட அடர்த்தி d) ஆற்றல்

22. இயக்க எண்ணின் அலகு .....

a) $m^2 V^{-1} s^{-1}$ b) $N m^2 C^{-1}$ c) $m^{-2} V^{-1} s^{1}$ d) $N m^{-2} C^{-1}$

23. ஓம் விதி உட்படுவது .....

a) மாறா அழுத்தத்தில் b) மாறா பருமனில்

c) மாறா அடர்த்தியில் d) மாறா வெப்பநிலையில்

24. மின்கடத்து எண்ணின் சமன்பாடு .....

a) RA / ℓ b) ℓ^2 / RA c) $R \ell / A$ d) ℓ / RA

25. பெயர்வு வெப்பநிலையில், தன்மின்தடை எண் .....

a) சுழியாகும் b) பெருமம்

c) சிறுமம் d) முடிவிலா மதிப்பு

26. பெயர்வு வெப்பநிலை 4.2 K பெற்றுள்ளது .....

a) Cu b) Fe c) Hg d) Al

27. கார்பன் படிக மெல்லேடு வைக்கப்பட்ட ..... உள்ளகத்தால் ஆனது கார்பன் மின்தடையாக்கிகள்.

a) கார்பன் b) வெள்ளி c) தங்கம் d) செராமிக்

Best wishes

28. கார்பன் மின்தடையாக்கியில், தங்க வளையத்திற்கான மாறுபாட்டு அளவு .....

a) 5% b) 10% c) 2% d) 1%

29. தன் மின்தடை எண்ணின் அலகு .....

a) $\Omega\ m^{-1}$ b) $\Omega\ m$ c) Ω d) $\Omega^{-1}\ m^{-1}$

30. Thermistors என்பவை ..... மின்தடை வெப்பநிலை எண் கொண்டது.

a) நேர்க்குறி b) எதிர்க்குறி c) குறைந்த d) முடிவிலா

31. One kilowatt hour என்பது .....

a) 3.6×10^5 J b) 360×10^5 J

c) 36×10^5 J d) 0.36×10^5 J

32. 24 Ω மின்தடை கொண்ட ஒரு மின்சாதனம் 240 V மின்னழுத்தத்தில் செயல்படும் போது, மின்திறன் .....

a) 240 W b) 10 W c) 5760 W d) 2400 W

33. மின் வேதிய எண்ணின் அலகு .....

a) $kg\ C^{-1}$ b) kg C c) $kg^{-1}\ C^{-1}$ d) $kg^{2}\ C^{-1}$

34. R மின்தடை கொண்ட ஒரு தாமிரக் கம்பியின் நீளம் இருமடங்காகும் போது, அதன் தன்மின்தடை எண் .....

a) இரு மடங்காகும் b) கால் பங்காகும்

c) நான்கு மடங்காகும் d) மாறாது

35. இரண்டு 4 Ω மின்தடைகள் பக்க இணைப்பில் உள்ளன. அவைகளின் தொகுபயன் மின்தடை மதிப்பு .....

a) 16 Ω b) 4 Ω c) 2 Ω d) 8 Ω

36. ஒரே உலோகத்தாலான இரு கம்பிகளின் நீளங்கள் 2 m மற்றும் 8 m. இரண்டும் ஒரே மின்தடை மதிப்பைக் கொண்டுள்ளன எனில், அக்கம்பிகளின் விட்டங்களின் தகவு .....

a) 2 : 1 b) 2 : 8 c) 1 : 4 d) 1 : 2

37. மின்தடை வெப்பநிலை எண்ணின் அலகு .....

a) per ^0C b) mho m -1 c) ohm d) ohm meter

Best wishes

38. சம்மதிப்பு மின்தடை(R) உடைய n மின்தடைகள் தொடரிணைப்பில் உள்ளபோது, தொகுபயன் மின்தடை .....

a) n / R b) nR c) R / n d) 1 / nR

39. மின்தடை(R) என்பது .....

a) $m / nAe^2\tau$ b) $mL\ n/ Ae^2\tau$ c) $mLnAe^2\tau$ d) $mL\ / nAe^2\tau$

40. வோல்டா மின்கலத்தின் மின்னியக்கு விசை .....

a) 1.08 volt b) 2.2 volt c) 1.5 volt d) 2 volt

41. ஜூல் விதிப்படி, வெளிப்படும் வெப்ப ஆற்றல் .....

a) I^2Rt b) IRt c) V^2It d) எதுவுமில்லை

42. மின் உருகு இழையில், வெள்ளீயம் மற்றும் ஈயத்தின் அளவுகள் .....

a) 37% and 63% b) 53% and 47% c) 63% and 37% d) 47% and 53%

43. எதிர்க்குறி தாம்சன் விளைவை ..... பெற்றுள்ளது

a) Pb b) Pt c) Zn d) Cu

44. டேன்ஜண்ட் கால்வனாமீட்டரின் சுருக்கக் கூற்றெண் மதிப்பு .....

a) $V\ \Omega^{-1}$ b) $A\ m^{-1}$ c) radian d) A / radian

45. கம்பிச் சுருளின் தளம் காந்தப்புலத்திற்கு இணையாக இருந்தால், திருப்புவிசை .....

a) பெருமம் b) முடிவிலாதது c) சுழி d) சிறுமம்

46. ஒரு சுற்றில் வோல்ட்மீட்டரை ..... இணைப்பில் இணைக்க வேண்டும்.

a) தொடர் b) பக்க

c) (a) மற்றும் (b) இரண்டும் d) எதுவுமில்லை

47. சுழல் காந்த விகித மதிப்பு .....

a) $8.8 \times 10^{8}\ C\ kg^{-1}$ b) $8.8 \times 10^{10}\ C\ kg^{-1}$

c) $8.8 \times 10^{12}\ C\ kg^{-1}$ d) $8.8 \times 10^{14}\ C\ kg^{-1}$

48. புரட்டு வெப்பநிலைக்கு மேல் , வெப்ப மின்னியக்கு விசையானது .....

a) பெருமம் b) சிறுமம்

c) சுழி d) குறி மாறும். எண் மதிப்பு அதிகரிக்கும்

Best wishes

49. போர் மேக்னட்டான் மதிப்பு .....

a) 9.27×10^{-24} A m ^{2} b) 9.27×10^{24} A m ^{2}

c) 9.27×10^{-27} A m ^{2} d) 9.27×10^{27} A m ^{2}

50. மின்னோட்ட வளையத்தின் திருப்புத்திறன் .....

a) $M = I^2A$ b) $M = I A$ c) $M = I / A$ d) $M = A / I$

51. திருப்பு வெப்பநிலையில் மதிப்பு 250^0C, குளிர்ச்சந்தியின் வெப்பநிலை 10^0C எனில், புரட்டு வெப்பநிலை மதிப்பு .....

a) 490^0 C b) 240^0 C c) 260^0 C d) 250^0 C

52. 0.5 tesla காந்தத்தூண்டல் கொண்ட காந்தப் புலத்திற்குச் செங்குத்தாக ஒரு எலக்ட்ரான் 3×10^6 m s ^{1} திசைவேகத்தில் இயங்கினால், அதன் மீது செயல்படும் விசையின் மதிப்பு .....

a) 1.5×10^{-11} N b) 2.4×10^{-13} N

c) 1.5×10^6 N d) 2.4×10^{-11} N

53. டேன்ஜண்ட் கால்வனாமீட்டரில் மின்னோட்டம் பாயும் போது ஏற்படும் விலகல் 30^0. அதன் தளத்தை 90^0 சுழற்றிய பிறகு ஏற்படும் விலகல் .....

a) 0^0 b) 90^0 c) 60^0 d) 30^0

54. லொரன்ஸ் விசையின் மதிப்பு .....

a) $\theta = 45^0$ எனில் சுழி b) $\theta = 90^0$ எனில் சுழி

c) எப்போதும் சுழி d) $\theta = 90^0$ எனில் பெருமம்

55. இரு இணைக்கடத்திகளின் வழியே ஒரே திசையில் மின்னோட்டம் பாயும் போது, அவைகளிடையே தோன்றும் விசை .....

a) விரட்டு b) கவர்ச்சி c) சுழி d) பெருமம்

56. காந்த முனைகளை அறிய உதவும் விதி .....

a) ஆம்பியர் சுற்று விதி b) வலது உள்ளங்கை விதி

c) முனை விதி d) பயட்-சாவர்ட் விதி

57 சைக்ளோட்ரானால் எலக்ட்ரானை முடுக்க இயலாது. அதன் காரணம் .....

a) அதன் மின்னூட்டம் b) அதன் அளவு

c) அதன் பருமன் d) பெரும திசைவேகங்களில் நிறை மாறுபடும்

Best wishes

58. சம நீளம் கொண்ட இரு கம்பிகள் முதலில் தொடர் இணைப்பிலும் , பிறகு பக்க இணைப்பிலும் ஒரு மின்மூலத்துடன் இணைக்கப்படுகின்றன. இந்த இரண்டு நிகழ்வுகளிலும் வெளிப்படும் வெப்ப ஆற்றல்களிடையே உள்ள தகவு .....

a) 1 : 2 b) 2 : 1 c) 4 : 1 d) 1 : 4

59. இயங்கு சுருள் கால்வனாமீட்டரில் , கம்பிச் சுருளைத் தொங்கவிட பாஸ்பர்-வெண்கல இழையைப் பயன்படுத்தக் காரணம் .....

a) கடத்தும் திறன் அதிகம்

b) மின்தடை எண் அதிகம்

c) ஓரலகு கோண விலகலுக்கான திருப்புவிசை அதிகம்

d) ஓரலகு கோண விலகலுக்கான திருப்புவிசை குறைவு

60. சிறந்த வோல்ட் மீட்டரின் பண்பு .....

a) சுழி மின்தடை b) உயர் மின்தடை

c) குறைந்த மின்தடை d) ஈறிலா மின்தடை

61. காந்தப் பாயத்தின் அலகு .....

a) tesla b) ampere c) weber d) farad

62. தூண்டு சுருளில் ஆற்றல் ..... ஆற்றலாகச் சேமிக்கப்படும்.

a) நிலைமின் b) மின் இயக்க c) மின்காந்த d) இயக்க

63. பரிமாற்று மின்தூண்டல் தத்துவம் பயன்படுவது .....

a) AC டைனமோ b) DC டைனமோ c) அணுக்கரு உலை d) மின்மாற்றி

64. மின்மாற்றியில் ..... ஐ அதிகரிக்க முடியாது.

a) உள்ளீடு மின்னழுத்தம் b) உள்ளீடு மின்னோட்டம்

c) உள்ளீடு மின்திறன் d) இவை அனைத்தும்

65. ஏற்று மின்மாற்றியில் , வெளியீடு மின்னோட்டம் .....

a) > உள்ளீடு மின்னோட்டம் b) < உள்ளீடு மின்னோட்டம்

c) = உள்ளீடு மின்னோட்டம் d) இதில் எதுவுமில்லை

Best wishes

66. தாமிர இழப்புகளைக் குறைக்க ..... பயன்படும்.

a) மெல்லிய கம்பி b) தடித்த கம்பி c) சிலிக்கன் ஸ்டீல் d) ஸ்டெல்லாய்

67. E_{rms} மதிப்பு .....

a) 0.707 E_o b) 1.414 I_o c) 1.414 E_o d) 0.707 I_o

68. மின்தேக்கி தன் வழியே பாய அனுமதிப்பது .....

a) AC மட்டும் b) DC மட்டும்

c) AC மற்றும் DC இரண்டையும் d) எதுவுமில்லை

69. ஒத்ததிர்வு அதிர்வெண் .....

a) 1 / √(LC) b) 2π / √(LC) c) 2π √(LC) d) 1 / 2π √(LC)

70. அடைப்புச் சுருள் ..... - ல் பயன்படுகிறது.

a) AC b) DC c) AC, DC இரண்டிலும் d) எதுவுமில்லை

71. ஒரு AC மின்சுற்றில், மின்னோட்டதின் சராசரி மதிப்பு .....

a) $E_{rms} I_{rms}$ b) $E_o I_o$ c) சுழி d) ஈறிலா மதிப்பு

72. மின்தேக்கி, மின்தூண்டி மட்டும் உள்ள AC மின்சுற்றில், தொகுபயன் மின்தடை .....

a) $\sqrt{\{R^2 + (\omega L - 1/\omega C)^2\}}$ b) $\{R^2 + (\omega L + 1/\omega C)^2\}$

c) $\{R^2 + \omega^2 L^2 + \omega^2 C^2\}$ d) $\sqrt{\{R^2 + 1/\omega^2 C^2\}}$

73. வீடுகளுக்குப் பயன்படும் AC ன் அதிர்வெண் .....

a) 100 Hz b) 100 KHz c) 50 Hz d) 50 kHz

74. மின்தடையாக்கியின் வழியே பாயும் AC ன் rms மதிப்பு 5A. அதன் உச்ச மதிப்பு .....

a) 1.732 A b) 70.7 A c) 7.07 A d) 0.707 A

75. 0.5 m^2 குறுக்குவெட்டு பரப்பும்,10 சுற்றுகளும் கொண்ட கம்பிச் சுருளின் தளம் 0.5 tesla காந்தப் புலத்திற்கு இணையாக வைக்கப்படுகிறது. கம்பிச்சுருள் வழியே செல்லும் மொத்த காந்தப் பாயம் .....

a) 100 Wb b) 10 Wb c) 1 Wb d) zero

76. 11000W ,220 V மின்திறன் 2 Ω கொண்ட கம்பியின் வழியே அனுப்பினால், திறன் இழப்பு .....

a) 2500 W b) 0.25 W c) 250 W d) 5000 W

Best wishes

77. தன் மின் தூண்டலின் அலகு .....

a) henry b) $V\ s\ A^{-1}$ c) $Wb\ m^{-1}$ d) இவை அனைத்தும்

78. மூன்று கட்ட AC மின்னியற்றியில், அடுத்தடுத்த சுருள்கள் இடையே கோண அளவு .....

a) 45° b) 90° c) 120° d) 180°

79. மின்தேக்கியின் மின்மறுப்பின் அலகு .....

a) பாரட் b) ஹென்றி c) ஓம் d) மோ

80. லென்சு விதியானது ..... அழிவின்மை விதியின் அடிப்படையில் அமைகிறது.

a) மின்னூட்ட b) உந்த c) நிறை d) ஆற்றல்

81. வெற்றிடத்தில் ஒளியின் திசைவேகம் .....

a) $\sqrt{(\mu_o / \varepsilon_0)}$ b) $\sqrt{(2\mu_o / \varepsilon_0)}$ c) $\sqrt{(\mu_o \varepsilon_0)}$ d) $1 / \sqrt{(\mu_o \varepsilon_0)}$

82. ஹெர்ட்ஸ் ஆய்வில் , மின்காந்த அலைகளின் அதிர்வெண் .....

a) 5×10^7 Hz b) 7×10^5 Hz

c) 5×10^{-7} Hz d) 7×10^{-5} Hz

83. அலைக் கொள்கையின்படி , ஒளியின் திசைவேகம் ..... ஊடகத்தில் பெருமம்.

a) அடர்குறை b) அடர்மிகு

c) அனைத்து d) எதுவுமில்லை

84. வானம் நீலநிறமாகத் தோன்ற காரணம் .....

a) டின்டால் விளைவு b) இராமன் விளைவு

c) ஒளிச்சிதறல் d) குறுக்கீட்டு விளைவு

85. ஒளிவிலகல் எண் 1.5 கொண்ட ஊடகத்தில், ஒளியின் திசைவேகம் .....

a) $2 \times 10^8\ m\ s^{-1}$ b) $3 \times 10^{-8}\ m\ s^{-1}$

c) $2 \times 10^8\ m\ s^{-1}$ d) $1.5 \times 10^8\ m\ s^{-1}$

86. பாதை வேறுபாடு $(3/2)\lambda$ எனில், கிடைப்பது ..... குறுக்கீட்டு விளைவு

a) ஆக்க b) அழிவு

c) இரண்டும் d) எதுவுமில்லை

Best wishes

87. சோப்புக் குமிழியில் பல்வேறு வண்ணங்கள் தோன்றுவதின் காரணம் .....

a) தளவிளைவு b) குறுக்கீட்டு விளைவு

c) விளிம்பு விளைவு d) எதிரொளிப்பு

88. X- கதிர் விளிம்பு விளைவில், தடையின் அளவு அலைநீளம் ..... அளவில் அமையவேண்டும்.

a) λ-வை விட அதிகமான b) λ-வை விடகுறைவான

c) λ-உடன் ஒப்பிடக் கூடிய d) சுழி

89. கண்ணாடியில் படுகோணத்தின் மதிப்பு, தளவிளைவு கோணத்திற்குச் சம்மாக அமையும் போது, படுகதிருக்கும், எதிரொளிப்புக் கதிருக்கும் இடையே உள்ள கோணம் .....

a) 57.5^{o} b) 115° c) 137° d) 18°

90. ஓரச்சுப் படிகத்திற்கு எடுத்துக்கட்டு .....

a) கால்சைட் b) குவார்ட்ஸ்

c) டூர்மலைன் d) இவை அனைத்தும்

91. ஒளியியல் சுழற்சி சார்ந்திருப்பது .....

a) தடிமன் மற்றும் அடர்த்தி b) வெப்பநிலை மற்றும் அலைநீளம்

c) (a) மற்றும் (b) இரண்டும் d) வெப்பநிலை மட்டும்

92. ஒளியியல் செயல்திறன் மிக்க பொருள் .....

a) சோடியம் குளோரைடு b) கால்சியம் c) பாஸ்பரஸ் d) சர்க்கரை

93. முதல் மற்றும் ஒன்பதாவது நியுட்டன் வளையங்களின் ஆரங்களின் தகவு .....

a) 4 : 9 b) 1 : 3 c) 1 : 9 d) 1 : 81

94. இராமன் இடப்பெயர்ச்சி ..... க்கு நேரினம்.

a) ஸ்டோக்ஸ் வரி b) ஆன்ட்டிஸ்டோக்ஸ்வரி c) இராமன் வரி d) இராலே வரி

95. ஒளிவிலகல் எண் 1.732 கொண்ட ஊடகத்தில், தளவிளைவுக் கோணம் .....

a) 45° b) 90° c) 60° d) 30°

96. நியுட்டன் வளைய ஆய்வில், m மற்றும் (m+4) ஆவது கருமை வளையங்களின் ஆரங்கள் √5 mm, √7 mm எனில், m மதிப்பு .....

a) 2 b) 4 c) 8 d) 10

BEst wishes

97. மின்காந்த அலைகளில் , மின்புலம் மற்றும் காந்தப் புலங்களுக்கு இடையே உள்ள கட்ட வேறுபாடு .....

a) 0° b) 90° c) 60° d) 30°

98. கீற்றணி மூலத்தின் மதிப்பு 2×10^{-6} m எனில் , ஓரலகு நீளத்திலுள்ள கோடுகள் எண்ணிக்கை .....

a) 5000 b) 6000 c) 5×10^5 d) 5×10^6

99. மூலக்கூறுகள் ..... நிறமாலையைத் தரும்.

a) வரி b) பட்டை c) தொடர் d) இராமன்

100. ஃப்ரான்ஹோபர் விளிம்பு விளைவில் ..... அலைமுகப்பு பயன்படும்.

a) கோளக b) உருளை c) நீள்வட்ட d) சமதள

101. மின்னிறக்கக் குழாயில் , ... பாதரச அழுத்தத்தில் நேர்மின்தம்பம் தோன்றுகிறது.

a) 100 mm b) 1 mm c) 10 mm d) 0.01 mm

102. எலக்ட்ரானின் மின்னூட்ட நிறை தகவு காணும் ஆய்வு .....

a) மில்லிகன் b) ரூதர்போர்டு c) தாம்சன் d) பிரௌட்

103. அணுக்கருவின் அளவானது , அணுவின் அளவை விட ..... மடங்கு குறைவு.

a) 10000 b) 100 c) 10 d) 1000

104. ஹைட்ரஜன் அணுவில் , முதல் கிளர்ச்சி நிலையின் ஆரம் .....

a) 0.53 A^o b) 2.12 A^o c) $\sqrt{2} \times 0.53$ A^o d) 1.06 A^o

105. ஹைட்ரஜன் அணுவில் , இரண்டாம் சுற்று வட்டப் பாதையின் ஆற்றல் .....

a) 1.51 MeV b) -3.4 eV c) -1.51 eV d) -13.6 eV

106. அலை எண்ணின் அலகு .....

a) m^{-1} b) m c) C d) m^2

107. ஹைட்ரஜன் அணுவின் அயனியாக்க மின்னழுத்தம் .....

a) 13.6 eV b) 13.6 V c) 10.2 eV d) 1.51 V

108. மின்புலத்தின் காரணமாக நிறமாலை வரிகள் பிரிகை அடைதல் ..... ஆகும்.

a) இராமன் விளைவு b) டின்டால் விளைவு

c) சீமன் விளைவு d) ஸ்டார்க் விளைவு

Best wishes

109. தொடர் X- கதிர் நிறமாலை ..... ஆல் உருவாகிறது.

a) எலக்ட்ரானின் முடுக்கம் b) எலக்ட்ரான் அமைப்பின் மாறுபாடு

c) எலக்ட்ரானின் தாவுதல் d) எலக்ட்ரானின் எதிர் முடுக்கம்

110. கூலிட்ஜ் குழாயில் , X-கதிர்களின் செறிவு ..... -ஐப் பொறுத்தது.

a) ஆனோடு,கேத்தோடு இடையேயான மின்னழுத்தம் b) இலக்குப் பொருள்

c) மின்னிழையின் மின்னோட்டம் d) அழுத்தம்

111. ஆனோடு மற்றும் கேதோடு இடையே மின்னழுத்த வேறுபாடு 124 வோல்ட். உருவாகும் X-கதிர்களின் அலைநீளம் .....

a) 10^{-10} m b) 10^{-8} m c) 10^{8} m d) 12400 A^{o}

112. எலக்ட்ரான் ஒன்று L கூட்டிலிருந்து K கூட்டிற்குத் தாவினால் கிடைக்கும் X-கதிர் வரி .....

a) K_{α} b) K_{β} c) L_{β} d) L_{α}

113. X-கதிரின். அலைநீளமானது, அடுத்தடுத்த அணிக்கோவை தளங்கள் இடையே உள்ள தொலைவுக்குச் சமம். முதல் வரிசை பெருமத்திற்கு சாய்கோணத்தின் மதிப்பு .....

a) 0° b) 90° c) 30° d) 60°

114. ஹைட்ரஜன் அணுவில் ,பின்வரும் பெயர்வுகளில், ... க்கு பெரும அதிர்வெண் கொண்ட கதிர்வீச்சு தோன்றும்.

a) 4 → 3 b) 6 → 2 c) 2 → 1 d) 5 → 2

115. எண்ணெய்த் துளி மீது உள்ள மின்னூட்டம் 8 X 10^{-18} C எனில், அதிலுள்ள அடிப்படை மின்னூட்டங்களின் எண்ணிக்கை .....

a) 500 b) 5000 c) 50 d) 0.5

116. ஒரு ஆல்பாத் துகள், ஒரு புரோட்டானின் மின்னூட்ட நிறை தகவுகளின் விகிதம் .....

a) 1 : 2 b) 1 : 1 c) 2 : 1 d) 1 : 4

117. முதன்மை குவாண்டம் எண் மதிப்பு 3 எனில், l மதிப்புகள் ..... ஆக அமையும்.

a) 3,2,1 b) 2,1,0 c) 1,0,-1 d) 0,-1,-2

118. மில்லிகன் ஆய்வில் ,5 செமீ இடைத்தொலைவுள்ள தட்டுகள் இடையே மின்னழுத்த வேறுபாடு 5000 V எனில், மின்புல மதிப்பு .....

a) 10^{3} V m^{-1} b) 10^{4} V m^{-1} c) 10^{5} V m^{-1} d) b) 10^{2} V m^{-1}

Best wishes

119. அணுவின் முதல் மூன்று போர் வட்டப் பாதைகளின் ஆரங்களின் தகவு .....

a) 1 : 2 : 3 b) 1 : 3 : 5 c) 1 : 8 : 27 d) 1 : 4 : 9

120. லேசரில் , இடைநிலையில் அணுக்களின் ஆயுட்கால மதிப்பு .....

a) 10^{-8} s b) 10^{-3} s c) 10^{8} s d) 10^{3} s

121. ஒளிமின் எலக்ட்ரானின் திசைவேகமானது ..... ஐச் சார்ந்திருக்கும்.

a) படும் கதிர்வீச்சின் அதிர்வெண் b) படும் கதிர்வீச்சின் செறிவு

c) ஆனோடு மற்றும் கேத்தோடு இடையே மின்னழுத்தம் d) எதுவுமில்லை

122. டி பிராலி அலைநீளம் ..... க்கு நேர் தகவிலிருக்கும்.

a) E b) $E^{½}$ c) $E^{-½}$ d) E^{2}

123. 4 V மின்னழுத்தத்தில் முடுக்கிவிக்கப்படும் எலக்ட்ரானின் டி பிராலி அலைநீளம் .....

a) 12.27 A^{o} b) 1.67 A^{o} c) 6.135 A^{o} d) ஈறிலாதது

124. நிலைத்தன்மை பெற்ற பாதை அமைய, சுற்றுப் பாதையின் சுற்றளவு ..... ஆக அமைதல் வேண்டும்.

a) n λ b) n^{2} λ c) (n+1) λ d) n / λ

125. V மின்னழுத்தத்தில் எலக்ட்ரான் முடுக்கிவிக்கப்பட்டால், மின்கலத்தினால் செய்யப்படும் வேலை .....

a) மின்னூட்டம் / மின்னழுத்தம் b) மின்னூட்டம் X மின்னழுத்தம்

c) மின்னூட்டம்^{2} / மின்னழுத்தம் d) எதுவுமில்லை

126. நியுட்டனின் எந்திரவியலில் நிறை , காலம், நீளம் ஆகியவை ஒன்றுக்கொன்று .....

a) சார்பற்றவை

b) திசைவேக அதிகரிப்பதால், அதிகரிக்கும்

c) திசைவேக அதிகரிப்பதால், குறையும்

d) சார்புள்ளவை

127. கால நீட்டிப்பின்படி ..... என்பது சரியானது.

a) $t < t_o$ b) $t = t_o$ c) $t > t_o$ d) t = முடிவிலா மதிப்பு

Best wishes

128. ஐன்ஸ்டீனின் நிறை ஆற்றல் சமன்பாடு .....

a) $E = mc$ b) $E = mc^2$ c) $E = mc^3$ d) $E = mc^2 / 2$

129. ஓய்வு நிறை m_o கொண்ட எலக்ட்ரான் ஒன்று ஃபோட்டானின் திசைவேகத்தில் இயங்கினால், அதன் நிறையானது ..... ஆகும்.

a) $2 m_o$ b) m_o c) $m_o / 2$ d) முடிவிலா மதிப்பு

130. 3 கிகி நிறை முழுவதும் ஆற்றலாக மாற்றப்பட்டால், வெளிப்படும் ஆற்றல் .....

a) 9×10^{16} J b) 27×10^{16} J c) 3×10^{8} J d) 18×10^{16} J

131. 0.8c திசைவேகத்தில் இயங்கும் எலக்ட்ரானின் இயக்க ஆற்றல் மதிப்பு .....

a) $\frac{1}{2}mv^2$ b) $p^2 / 2m$ c) mc^2 d) $(m - m_o)c^2$

132. நியுட்டனின் விதிகளுக்கு உட்படுவது .....

a) நிலைமைமற்ற குறிப்பாயம் b) நிலைமைக் குறிப்பாயம்

c) அனைத்து குறிப்பாயங்களும் d) குறிப்பாயம்

133. ஒளியின் திசைவேகம் ..... ல் மாறிலி.

a) நிலைமைமற்ற குறிப்பாயம் b) நிலைமைக் குறிப்பாயம்

c) அனைத்து குறிப்பாயம் d) எதுவுமில்லை

134. அதி வேகத்தில் இயங்கும் எலக்ட்ரான் ஒன்றை ஓய்வு நிலைக்குக் கொண்டு வர தேவைப்படும் ஆற்றல் .....

a) eV b) eV_o c) $\frac{1}{2}mv^2$ d) mv^2

135. ஒரு ஆல்பா துகள் மற்றும் ஒரு புரோட்டான் ஒரே மின்னழுத்தத்தில் முடுக்கப்படுகின்றன. அவைகளின் டி பிராலி அலைநீளங்களின் தகவு .....

a) 1 : 1 b) 1 : 2 c) 1 : 3 d) $1 : 2\sqrt{2}$

136. எலக்ட்ரான் நுண்ணோக்கி செயல்படுவது .....

a) உயர் அழுத்தத்தில் b) உயர் வெற்றிடத்தில்

c) சாதாரண அழுத்தத்தில் d) எதுவுமில்லை

137. இயங்கும் விண்வெளி ஓடத்தில் உள்ள கடிகாரம் புவியில் உள்ள கடிகாரத்தை .....

a) விட மெதுவாகச் செல்லும் b) விட வேகமாகச் செல்லும்

c) போன்று இயங்கும் d) எதுவுமில்லை

Best wishes

138. 5×10^{-12} m அலைநீளம் கொண்ட எலக்ட்ரான் ஒன்றை முடுக்குவிக்கத் தேவைப்படும் மின்னழுத்தம் .....

a) 6000 V b) 60000 V c) 5000 V d) 50000 V

139. 3.3×10^{-24} kg m s^{-1} உந்தம் கொண்ட எலக்ட்ரானின் டி பிராலி அலைநீளம் .....

a) 10 A^o b) 2 A^o c) 20 A^o d) 1 A^o

140. துகளின் ஒன்றின் இயக்க ஆற்றல் .....

a) pv / 2 b) $p^2 v$ c) $p v^2$ d) mv

141. $_8O^{16}$ மற்றும் $_6C^{14}$ என்ற அணுக்கருக்கள் .....

a) ஐசோடோப்புகள் b) ஐசோபார்கள்

c) ஐசோடோன்கள் d) எதுவுமில்லை

142. அணுக்கரு அடர்த்தியின் மதிப்பு .....

a) 13600 kg m^{-3} b) 13.6 kg m^{-3} c) 1.816×10^{17} kg m^{-3} d) 1.816×10^{-17} kg m^{-3}

143. கார்பன் அணுக்கருவின் மின்னூட்டம் .....

a) 9.6×10^{-19} C b) 1.6×10^{-19} C

c) 11.2×10^{-19} C d) $1.6 \times 10^{+19}$ C

144. 1amu க்குச் சமமான ஆற்றல் .....

a) 93.1 eV b) 931 eV c) 93.1 MeV d) 931 MeV

145. அணுக்கருத் துகள்கள் இடையே ..... பரிமாற்றம் செய்யப்படுவதால், அணுக்கருவிசைகள் தோன்றுகின்றன.

a) புரோட்டான்கள் b) எலக்ட்ரான்கள் c) மீசான்கள் d) நியுட்ரான்கள்

146. ஒரு கதிரியக்கத் தனிம்ம் 3 α துகள்களையும், 3 β- துகள்களையும் வெளிப்படுத்துகிறது எனில், அதன் அணு எண் மதிப்பு .....

a) 3 அதிகரிக்கும் b) 3 குறையும் c) 6 அதிகரிக்கும் d) 6 குறையும்

147. $_0n^1 \rightarrow {}_1H^1 + {}_1e^0 + X$ சமன்பாட்டில் X என்பது .....

a) நியுட்ரான் b) புரோட்டான்

c) எலக்ட்ரான் d) ஆன்ட்டி நியுட்ரினோ

Best wishes

148. யுரேனியத்தின் அரை ஆயுட்காலம் 4000 ஆண்டுகள். அதன் அனைத்து அணுக்களும் சிதைவடைய ஆகும் காலம் .....

a) $5T_{½}$ b) $10\ T_{½}$ c) $100\ T_{½}$ d) ஈறிலா மதிப்பு

149. சைக்ளோட்ரானில் உருவாகும் துகளின் ஆற்றல் .....

a) GeV b) MeV c) eV d) meV

150. யுரேனியத்தின் ஒரு கருத்துகளுக்கு வெளிப்படும் சராசரி ஆற்றல் அளவு .....

a) 200 MeV b) 0.85 MeV c) 7.6 MeV d) 8.8 MeV

151. அணுக்கரு உலையில் பயன்படும் தத்துவம் .....

a) அணுக்கரு இணைவு வினை b) கட்டுப்பாடான அணுக்கரு பிளவு தொடர்வினை

c) கட்டுப்பாடற்ற அணுக்கரு பிளவு தொடர்வினை d) எதுவுமில்லை

152. அணுக்கரு இணைவு வினை நடைபெறுவது .....

a) அணு குண்டு b) ஹைட்ரஜன் குண்டு

c) அணுக்கரு உலை d) (a) மற்றும் (b) இரண்டும்

153. நியுட்ரினோ உள்ள தொகுதி ..... ஆகும்.

a) ஃபோட்டான்கள் b) லெப்டான்கள்

c) மீசான்கள் d) பாரியான்கள்

154. தணிப்பான்கள் நியுட்ரானின் ஆற்றலை 2 MeV லிருந்து ..... க்கு மாற்றுகிறது.

a) 0 eV b) 1000 eV c) 0.025 eV d) 10 eV

155. அயனியாக்கும் திறன் அதிகம் கொண்டது .....

a) α – துகள் b) β - துகள் c) γ - துகள் d) ஃபோட்டான்

156. கதிரியக்கத் தனிமத்தின் அரை ஆயுள் 5 நிமிடம். 20 நிமிடங்களில் சிதைவடையும் அளவு .....

a) 6.25% b) 25% c) 93.75% d) 75%

157. யுரேனியம் அணுக்கரு பிளவு அடைவதால் வெளிப்படும் நியுட்ரான்களின் சராசரி எண்ணிக்கை .....

a) 3 b) 2 c) 2.5 d) 3.5

BEst wishes

158. இரண்டு அணுக்கருக்களின் ஆரங்களின் தகவு 1 : 2. அவைகளின் நிறை எண்களின் தகவு .....

a) 8 : 1 b) 1 : 4 c) 4 : 1 d) 1 : 8

159. மூளைக் கழலைகளை இடமறிய பயன்படும் கதிரியக்க ஐசோடோப்பு .....

a) Na^{24} b) I^{131} c) Fe^{59} d) P^{32}

160. கதிரியக்கத் தனிமம் ஒன்று தொடக்க அளவில் (1 / e) மடங்காகக் குறைய எடுத்துக் கொள்ளும் காலம் .....

a) அரை ஆயுள் b) சராசரி ஆயுள்

c) மொத்த ஆயுள் d) ½ X அரை ஆயுள்

161. சிலிக்கானின் விலக்கப்பட்ட ஆற்றல் இடைவெளி .....

a) 0.7 V b) 0.3 V c) 1.1 eV d) 0.7 eV

162. எலக்ட்ரான் மற்றும் மின்துளைகள் சம எண்ணிக்கையில் இருப்பது .....

a) புறவிலான குறைக்கடத்திகள் b) P – வகை குறைக்கடத்திகள்

c) N – வகை குறைக்கடத்திகள் d) உள்ளார்ந்த குறைக்கடத்திகள்

163. ஜெர்மானியம் PN - சந்தி டையோடு ஒன்றின் மின்னழுத்த அரண் மதிப்பு .....

a) 0.7 V b) 0.3 V c) 1.1 eV d) 0.7 eV

164. PN சந்தி டையோடில் உருவாகும் திருப்புச் சார்பு தெவிட்டு மின்னோட்டத்திற்குக் காரணமாக அமைவது .....

a) பெருபான்மை ஊர்திகள் b) ஏற்பான் அயனிகள்

c) சிறுபான்மை ஊர்திகள் d) கொடையாளி அயனிகள்

165. AC ஐ DC ஆக மாற்றுவது .....

a) டையோடு b) டிரான்சிஸ்டர் c) IC d) OP-AMP

166. மின்னழுத்தச் சீரமைப்புச் சுற்றில் பயன்படுவது .....

a) டையோடு b) ICs

c) செனர் டையோடு d) (a) மற்றும் (b) இரண்டும்

167. α மற்றும் β இடையே உள்ள தொடர்பு .....

a) $\beta = (1 - \alpha) / \alpha$ b) $(1/\alpha) = 1 + (1/\beta)$ c) $(1/\alpha) + (1/\beta) = 1$ d) $1/(\alpha + \beta) = 1$

Best wishes

168. நேராக்கப் பின்னூட்டத்தில் உள்ளீடு சைகை மற்றும் பின்னூட்ட சைகை ..... கட்டத்தில் அமையும்.

a) ஒரே b) எதிரெதிர் c) (a) மற்றும் (b) இரண்டும் d) 90°

169. Ex-OR கேட்டில் இரண்டு உள்ளீடுகளும் உயர்வு நிலையில் இருந்தால், வெளியீடானது .....

a) 0.3 volt b) 6.4 volt c) 8.5 volt d) 4.5 volt

170. ஒரு செயல்பாட்டுப் பெருக்கியின் உள்ளீடு மின்தடையானது ..... ஆக அமையும்.

a) முடிவிலா மதிப்பு b) சுழி c) உயர்வு d) தாழ்வு

171. $(A + B)(\bar{A} + C)$ என்பது .....

a) AB b) $\bar{A}$ B c) AC + $\bar{A}$B d) AB + $\bar{A}$C

172. கால்பிட் அலையியற்றி உருவாக்குவது .....

a) சதுர அலை b) செவ்வக அலை

c) முக்கோண அலை d) சைன் வடிவ அலை

173. LED -ல் உமிழப்படும் ஒளியின் நிறம் ..... சார்ந்தது.

a) பின்னோக்குச்சார்பு b) முன்னோக்குச் சார்பு

c) (a) மற்றும் (b) இரண்டும் d) குறைக்கடத்திப் பொருளின் தன்மை

174. உள்ளீடுகள் இரண்டும் சுழியாக உள்ள போது, வெளியீடு கிடைப்பது ..... கேட் ஆகும்.

a) OR b) NOR c) Ex-OR d) AND

175. ஒரு டிரான்சிஸ்டரில் $\beta = 40$, அடிவாய் மின்னோட்டம் 25 μA எனில், ஏற்பான் மின்னோட்டம் .....

a) 100 μA b) 1000 mA c) 1 mA d) 0.1 mA

176. சரிவு முறிவு முதன்மையாக சார்ந்துள்ள நிகழ்வு .....

a) மோதல் b) அயனியாக்கம்

c) மாசூட்டல் d) மறு ஒன்றிணைப்பு

177. CE பெருக்கி ஒன்றின் உள்ளீடு மற்றும் வெளியீடு மின்னழுத்தங்கள் எப்போதும் ..... கட்ட வேறுபாட்டில் அமையும்.

a) 0° b) 90° c) 180° d) 270°

Best wishes

178. சுவிட்சாகச் செயல்படும் ஒரு எலக்ட்ரானியல் பகுதி .....

a) டையோடு b) டிரான்சிஸ்டர்

c) வெற்றிடக் குழாய்கள் d) எதுவுமில்லை

179. லாஜிக் செயல்பாட்டில் A + AB = ...

a) AB b) B c) A d) எதுவுமில்லை

180. அலையியற்றி என்பது .....

a) நேர்ப் பின்னூட்டம் உள்ள பெருக்கி b) AC –ஐ DC ஆக மாற்றும்

c) பின்னூட்டம் இல்லாத பெருக்கி d) நேர்ப் பின்னூட்டம் உள்ள பெருக்கி

181. ஊர்தி அலைகளின் மீது செவியுணர் சைகைகளை சுமத்துதல் ..... எனப்படும்

a) பரப்புதல் b) ஏற்பு

c) அலைப்பண்பிறக்கம் d) பண்பேற்றம்

182. தகவல் தொடர்புக்குப் பயன்படும் அலைகள் .....

a) ரேடியோ அலைகள் b) மைக்ரோ அலைகள்

c) (a) மற்றும் (b) d) காமாக் கதிர்கள்

183. ஊர்தி அலைகள் என்பன .....

a) உயர் அதிர்வெண் ரேடியோ அலைகள் b) உயர் வீச்சு அலைகள்

c) குறை அதிர்வெண் ரேடியோ அலைகள் d) செவியுணர் அலைகள்

184. செவியுணர் அலைகளின் அதிர்வெண் .....

a) 20 Hz b) 200 Hz c) 200 Hz to 2000 Hz d) 20 Hz to 20 kHz

185. நுண்ணொலி வாங்கியானது ..... ஆற்றலை ..... ஆற்றலாக மாற்றுகிறது.

a) ஒளி, மின் b) ஒலி, மின் c) மின், ஒளி d) மின், ஒலி

186. மின்னாற்றலை , ஒலி ஆற்றலாக மாற்றுவது .....

a) மைக்ரோபோன் b) காமிரா

c) ஒலிப்பெருக்கி d) படக் குழாய்

Best wishes

187. அலைப் பண்பேற்ற எண் ..... ஆக உள்ள போது, பண்பேற்றப்பட்ட அலையில் உருக்குலைவு ஏற்படுகிறது.

a) m = 1 b) m > 1 c) m < 1 d) m = 0

188. வீச்சுப்பண்பேற்ற அலையில் , பட்டை அகலம் .....

a) சைகை அதிர்வெண்ணுக்குச் சமம். b) சைகை அதிர்வெண்ணின் இருமடங்கு

c) சைகை அதிர்வெண்ணின் மூன்று மடங்கு d) சைகை அதிர்வெண்ணின் நான்கு மடங்கு

189. பரப்பி விண்ணலைக் கம்பியானது , மின்மாறுபாடுகளை ஆக ..... மாற்றுகிறது.

a) காந்த ஆற்றல் b) மின்னாற்றல்

c) மின்காந்த ஆற்றல் d) நிலையாற்றல்

190. ஒரு பரப்பியில் , RF பகுதி உருவாக்குவது .....

a) ஊர்தி அலைகள் b) செவியுணர் அலைகள்

c) பண்பேற்ற அலைகள் d) மின்காந்த ஆற்றல்

191. அலைப்பண்பிறக்கியில் பயன்படும் ஒரு பகுதி .....

a) டையோடு b) டிரான்சிஸ்டர்

c) மைக்ரோபோன் d) ஒலிப்பெருக்கி

192. FM ஏற்பியில், இடைநிலை அதிர்வெண் மதிப்பு .....

a) 455 kHz b) 10.7 MHz c) 1055 kHz d) 455 MHz

193. தொலைக்காடசி பரப்பியில் , ஒலிச்சைகைகள் ..... ஆகும்.

a) வீச்சுப் பண்பேற்றம் b) அதிர்வெண் பண்பேற்றம்

c) கட்டப் பண்பேற்றம் d) எதுவுமில்லை

194. மறைப்புத் துடிப்புகள் ..... க்கு அளிக்கப்படுகின்றன.

a) எலக்ட்ரான் துப்பாக்கியின் கிடைத்தள விலக்கத் தகடு

b) எலக்ட்ரான் துப்பாக்கியின் செங்குத்து விலக்கத் தகடு

c) எலக்ட்ரான் துப்பாக்கியின் மின்னிழை

d) எலக்ட்ரான் துப்பாக்கியின் கட்டுப்படுத்தும் கிரிடு

Best wishes

195. சட்ட இசைவுப் பொருத்தத் துடிப்பு ..... தகடுகளுக்கு அளிக்கப்படுகிறது.

a) கிடைத்தள விலக்கத் தகடுகள் b) கட்டுப்படுத்தும் கிரிடு

c) செங்குத்து விலக்கத் தகடுகள் d) எதுவுமில்லை

196. ஒரு கிடைத்தள வரியை வரிக்கண்ணோட்டம் செய்ய ஆகும் காலம் .....

a) 15625 Hz b) 64 μ s c) 20 ms d) 25 ms

197. மோடம் பயன்படுவது .....

a) பண்பேற்றத்திற்கு b) பண்பிறக்கத்திற்கு

c) பண்பேற்றம் மற்றும் பண்பிறக்கத்திற்கு d) வரிக்கண்ணோட்டமிட

198. ஒளி இழைத் தகவல் தொடர்பில் பயன்படும் தத்துவம் .....

a) முழுஅக எதிரொளிப்பு b) ஒளிவிலகல் c) ஒளி எதிரொளிப்பு d) தளவிளைவு

199. புவிநிலைத் துணைக்கோள்கள் , புவிப்பரப்பிலிருந்து உள்ள தொலைவு .....

a) 36,000 km b) 63,000 km c) 36,000 m d) 3,600 km

200. பின்னிய வரிக்கண்ணோட்டத்தில் ..... விளைவு நீக்கப்படுகிறது.

a) உருக்குலைவு b) தேவையற்ற சைகை c) சிமிட்டல் d) இரைச்சல்

Best wishes

தயாரிப்பு

பா.இளங்கோவன். எம்.எஸ்ஸி., எம்.எட்., எம்.ஃபில்.,

(டாக்டர் இராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருது -2011)

முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் (இயற்பியல்),

பச்சையப்பன் மேனிலைப் பள்ளி,

காஞ்சிபுரம் - 631501.

Phone: 9444438464

மின்னஞ்சல் : belangovanphss@gmail.com